# C.S.I TAMIL CHURCH - OMAN

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# “பாலைவன மன்னா”

**நீதிமொழிகள் 15:2**



**ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும்.**
**மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும்.**

**மன்னா – 10** செப்டம்பர் 2020 **பிரதி – 6**



# ஆயர் மடல்



கிறிஸ்துவில் பிரியமானவர்களே!

செப்டம்பர் மாத வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் கனிவாய் நடத்திய ஆண்டவரைத் துதிப்போம். இப்புதிய மாதத்தின் ஆசிக்காக ஆண்டவரை வேண்டி நிற்போம். இறை வேண்டுதல்களை அதிகப்படுத்தவும், இறை வேண்டலின் எல்லைகளை விரிவாக்கவும் ஆலோசனை கூறுகிறேன்.

**இயற்கை அழிவினின்று காக்கப்பட:**

நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்காக, விமான விபத்தில் வாழ்வு இழந்தோருக்காக, மழை வெள்ளம், நெருப்பு, தொழிற்சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டோருக்காக நமது ஜெபங்களை விரிவுப்படுத்திக்கொள்வோம். மக்களின் பாதுகாப்புக்காக பாரத்தோடு ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**இந்திய தேசம் காக்கப்பட:**

பொருளாதார வீழ்ச்சியின்மூலம் பாதிக்கப்பட்டிருக்கும் இந்திய தேசத்திற்காகவும், தனியார்மயமாக்கத்தினால் தனித்து விடப்பட்டிருக்கும் எளிய மக்கள் நலனுக்காகவும் ஜெபிப்போம். பெருந்தொற்று மூலம் பாதிக்கப்பட்டிருக்கும் காலங்களில் அரசு மேற்கொள்ளும் இயற்கையை பாதிக்கும் சட்டங்களையும் கைவிட மன்றாட்டுகளை ஏறெடுப்போம்.

**இறை இல்லம் திறக்கப்பட:**

ஆலயங்கள் திறக்கப்படவும், தொழுகைகள் நடத்தப்படவும், இறை நம்பிக்கையோடு நல்வாழ்வு தொடரவும், இன்னலுற்றிருக்கும் குடும்பங்கள் வாழ்வு பெறவும், குடும்பங்களின் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபித்துக்கொள்வோம். இணையதளம் வழி இறைவழிபாட்டில் பங்குபெறுவோர் இறை ஆற்றலும், இறைஆசியும் பெற்றுவாழ மன்றாடி ஜெபிப்போம். ஆலயத்தின் தேவைகள் சந்திக்கப்பட நமது கைகளைக் கோர்த்துக்கொள்வோம்.

நாவுகள் எல்லாம் நாதர் இயேசுவை புகழும் நல்லதொரு மாதமாய் அமைய ஆண்டவர் அருள்புரிவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

# நாவுகள்

“ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும்” (நீதிமொழிகள் 15:2).

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! நாவு என்னும் தலைப்பை இணைந்து தியானிப்போம். நாவு என்று சொன்னவுடன் நம் உள்ளத்திற்கு வருவது உடல் அவயவங்களில் ஒன்று.



நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! (யாக்கோபு 3:5).

நமது உடல் அவயவங்களிலே மிகவும் கட்டுப்படுத்த வேண்டியதும், காயப்படுத்துவதும் நாவு என்பதை திருமறைப்பகுதி விளக்குகிறது. ஆண்டவர் நமது உடலில் தந்துள்ள அவயவங்கள் ஆண்டவரை மகிமைப்படுத்துவதாக அமையவேண்டும். இதுவே ஆண்டவரின் விருப்பம். நம்மால் நமது நாவை கட்டுப்படுத்திவிட முடியாது என யாக்கோபு 3:8 கூறுகிறது.

“நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது” ஏனென்றால் நாவு எப்படிப்பட்டது தெரியுமா?

1. **நாவு நெருப்பு – யாக்கோபு 3:6**
2. **நாவு கத்தி – சங்கீதம் 52:2**
3. **நாவு பட்டயம் - சங்கீதம் 54:4**
4. **நாவு அம்பு – எரேமியா 9:8**
5. **நாவு விஷம் - யாக்கோபு 3:8**

இப்படிப்பட்ட நாவு, உதடுகள் என்னும் மாம்ச பாதுகாப்புக்குள், 32 வீரர்கள் (பற்கள்) கடுமையான பாதுகாப்பில் எப்பொழுதும் தண்ணீர் நிறைந்த குளத்தின் நடுவில் (வாய்) மிகக் கடினமான பாதுகாப்பு வளையத்துக்குள் ஆண்டவர் வைத்திருக்கிறார். ஏனென்றால் நாவு மிக கூர்மையான ஆயுதம். இந்த ஆயுதம் ஆண்டவரின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். ஆண்டவரின் கட்டுப்பாட்டில் இயங்காத நாவு தவறாக பயன்படுத்தப்பட்டு விடுகிறது என்பதுதான் உண்மை. எப்படியெனில்

- கெடுக்கும் நாவு – சங்கீதம் 64:8
- கபட நாவு – சங்கீதம் 120:2
- பொய் நாவு – நீதிமொழிகள் 6:17
- பொல்லாத நாவு – சங்கீதம் 140:11
- வஞ்சக நாவு – செப்பனியா 3:13
- விஷமுள்ள நாவு – ரோமர் 3:13

இப்படிப்பட்ட நாவுகள் ஆண்டவருக்கு அருவருப்பானது. நமது நாவுகளே நம்மை நியாயம் தீர்க்கும் கருவியாக மாறிவிடுகிறது. எனவே நமது நாவை ஞானமாய் பயன்படுத்தவேண்டும்.

## 1. அக்கினி நாவு:- (அப்போஸ்தலர் 2:3, ஏசாயா 30:27)




"அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது" (அப். 2:3).

பெந்தேகோஸ்தே நாளின்போது ஒருமனப்பட்டு ஆண்டவரை ஆராதித்துக் கொண்டிருந்த மக்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட அனுபவம் பெற்றுக்கொண்டார்கள். பரிசுத்த ஆவியினுடைய அடையாளமாகவே அக்கினிமயமான நாவுகளை திருமறைக் குறிக்கிறது. நம்முடைய ஒருமனமும் பரிசுத்த ஆவியின் வல்லமையும் நமக்கு அக்கினி மயமான நாவுகள் உருவாக்குகிறது. ஆண்டவருடைய ஆற்றலை நமக்குத் தருகிறது. "கர்த்தருடைய நாவு பட்சிக்கிற அக்கினிபோல இருக்கும்" (ஏசா. 30:27). இந்த அக்கினியின் ஆற்றல் நம்மைப் பெலப்படுத்தும். கிருபையாய் ஆண்டவருக்கு பிரியமாய் நம்மை இயக்கும்.

## 2. அறிக்கைப்பண்ணும் நாவு:-

"பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைப்பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:11).

நமது நாவுகள் கர்த்தரை மகிமைப்படுத்த பயன்படுத்தவேண்டும். குறிப்பாக இயேசு கிறிஸ்துவை கர்த்தரென்று அறிக்கைப்பண்ண பயன்படுத்தும் போது படைப்பின் மேன்மை விளங்குகிறது.

சுவாசமுள்ள யாவும் கர்த்தரை துதிப்பதாக என சங்கீதக்காரராகிய தாவீது சங்கீதங்களை நிறைவு செய்கிறார். இன்று இறைபடைப்புகள் அனைத்தும் ஆண்டவரை மகிமைப்படுத்தி நிற்க நாமும் ஆண்டவரை அறிக்கைப்பண்ணும் நாவு உடையவர்களாக மாற ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

### 3. அர்பணிக்கப்படும் நாவு:-

நமது நாவுகள் ஆண்டவருக்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட நாவாக அமையவேண்டும். இப்படி அர்ப்பணிக்கப்பட்ட நாவாக இருக்கும்போது ஆண்டவர் உங்கள் வாயோடு இருந்து பேசுவார்.

**மோசே** : தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்கு பின்னாவது நான் வாக்கு வல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் என்றான் (யாத் 4:10)

தன்னையும், தன் உதடுகளையும் நாவையும் வார்த்தையும் கர்த்தருடைய கட்டுப்பாட்டிற்கு மோசே அர்ப்பணித்ததன் விளைவு என்ன தெரியுமா?

**கர்த்தர்** : "நீ போ; நான் உன் வாயோடே இருந்து நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்" (யாத். 4:12).

கர்த்தர் வாயோடு இருந்தார், போதித்தார், வார்த்தையாய் மாறினார். நாம் நமது நாவை ஆண்டவருக்கு என்றும், ஆண்டவருடைய கட்டுப்பாட்டிற்கும் கொடுப்போம் என்றால் நிச்சயமாக ஆண்டவர் பேசுவார்; வார்த்தையாய் மாறி நம்மை ஆசீர்வதிப்பார்.


நமது நாவுகளை ஆண்டவர் பயன்படுத்தும் நாவுகளாக, அறிக்கைப்பண்ணும் நாவுகளாக, அர்ப்பணிக்கப்பட்ட நாவுகளாக, நாம் ஆயத்தப்படுத்தி இருக்கிறோமா?

அதையே ஆண்டவர் விரும்புகிறார். அப்படியே செய்து இறைஆசி பெறுவோம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

### சுட்ட நாக்கு



குரு ஒருவருக்கு பேரழகியான ஒரு மகள் இருந்தாள். அதனால் அவளை திருமணம் முடிக்க பலர் போட்டி போட்டனர். அவர் தன் மகளை மணம் முடிக்க போட்டி போட்டவர்களிடம் "நான் இரண்டு கேள்விகள் கேட்பேன், அதற்கு சரியான பதில் சொல்பவர்க்கே எனது மகள்' என்று சொன்னார்.

மறுநாள் போட்டியாளர்கள் அனைவரும் குரு வீட்டில் இருந்தனர். குரு அவர்களைப் பார்த்து "உலகிலே இனிமையான ஒரு பொருளை கொண்டு வாருங்கள்" என்று சொன்னார். மறுநாள் எல்லோரும் ஆளுக்கொரு பொருளை கொண்டு வந்தனர். ஒருவன் தேனைக் கொண்டு வந்தான். இன்னொருவன் கரும்பைக் கொண்டு வந்தான். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு இனிமையான பொருளைக் கொண்டு வந்திருந்தனர். வரிசையில் கடைசியாக குருவின் ஒரு ஏழை சிஷ்யனும் நின்றிருந்தான்.

குரு அவனைப் பார்த்து நீயுமா என்று ஆச்சரியமாகக் கேட்டார். சீடன் நான் உங்கள் மகளைக் விரும்புகிறேன் என்று சொன்னான். குரு நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய் என்று கேட்டார்? சீடன் தான் கொண்டு வந்திருந்த சிறிய பெட்டியைத் திறந்து காட்டினான். அதனுள் ஒரு ஆட்டின் நாக்கு இருந்தது. குரு அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். குரு "என்ன இது? எதற்காக இதைக்கொண்டு வந்தாய்?" என்று கேட்டார். சீடன் "குருவே நீங்கள் உலகிலேயே இனிமையான பொருளை கொண்டுவர சொன்னீர்கள். நாவை விட உலகில் சிறந்த பொருள் வேறு ஏது? மனிதனுடைய நாவை கொண்டுவர முடியவில்லை. அதனால்தான் குறியீடாக ஆட்டின் நாவைக் கொண்டுவந்தேன். நாவில் இருந்துதான் இனிமையான சொற்கள் வருகின்றன. அதை சோகத்தில் இருப்பவன் கேட்டால் சந்தோசம் அடைகிறான். நோயாளி கேட்டால் குணம் அடைகிறான்" என்றான். குரு "இதில் நீ வெற்றி அடைந்தாய் வாழ்த்துக்கள்" என்று சொன்னார்.

சீடன் அடுத்த கேள்வி என்ன என்று கேட்டான். குரு "உலகிலேயே கசப்பான ஒரு பொருளை கொண்டுவா" என்று சொன்னார். மறுநாள் ஒவ்வொருவரும் ஒரு கசப்பான பொருளைக் கொண்டுவந்தனர். ஒருவன்

வேப்பங்காயை கொண்டுவந்தான். இன்னொருவன் எட்டிக்காயை கொண்டு வந்தான். கடைசியாக சீடன் வந்தான். அவன் கையில் அதேப் பெட்டி. அவன் அதை திறந்து காட்டினான். அதே ஆட்டின் நாக்கு.


குரு “என்ன விளையாடுகிறாயா?” இனிமையான பொருளை கேட்டேன். நாவை கொண்டு வந்தாய். கசப்பான பொருளைக் கேட்டதற்கும் நாவை கொண்டுவந்து இருக்கிறாயே? என்ன அர்த்தம்? என்று கோபமாகக் கேட்டார்.

சீடன் “தீயச் சொற்களை பேசும் நாவைப்போல கசப்பான பொருள் உலகில் உண்டா? அதில் இருந்து வரும் சொற்களைக் கேட்டால் மகிழ்ச்சியாய் இருப்பவனும் துயரம் கொள்கிறான். நட்பாக இருப்பவனும் பகையாக மாறுகிறான். எனவே நாவுதான் உலகிலேயே கசப்பான பொருள்” என்றுச் சொன்னான். சீடனின் அறிவைக்கண்டு வியந்த குரு தன் மகளை அவனுக்கே மணம் முடித்துக்கொடுத்தார்.

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

## நாவைக் காத்துக்கொள்வோம்




துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானை குற்றவாளியாக்குகிறவனுமாகிற இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் (நீதிமொழிகள் 17:15).

ஒருபெண் தன் பக்கத்து வீட்டுப்பெண்ணை பற்றி அக்கம்பக்கத்தில் ஒரு புரளியை கிளப்பிவிட்டாள். அது காட்டுத்தீயைப்போல அந்த ஊர் முழுவதும் பரவி விட்டது. அந்த பக்கத்து வீட்டுப்பெண் வெளியே தலைகாட்ட முடியாதபடி அந்த விஷயத்திற்கு கைகால் வைத்து பெரிய விஷயமாக மாற்றிவிட்டனர் ஊர்க்காரர்கள். என்னச் செய்வது என்று தெரியாமல் அந்த பெண் கண்ணீர் விட்டு அழுதாள். ஏன் என்னைப்பற்றி ஊரார் இப்படி பேசுகிறார்கள் என்று புரியாமல் தவித்தாள். கடைசியில் அந்தப் பெண் அந்த ஊரின் தலைமைப் மத போதகரிடம் சென்று காரியத்தை கூறிவிட்டு என்ன செய்வது என்றுக் கேட்டாள். அதற்கு அவர் நான் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறேன் என்று கூறி ஆறுதல்படுத்தி அனுப்பிவிட்டார். பின் அவர் விசாரித்தபோது, அது எங்கெங்கோ போய் கடைசியில் பக்கத்து வீட்டு பெண்ணில்போய் நின்றது. அந்த பெண்ணை கூப்பிட்டு, அவர் கையில் ஒரு பை நிறைய

அரிசியை கொடுத்து, தான் இருக்கும் இடத்திலிருந்து அவள் வீடு வரை வழியெல்லாம் அதைப் போட்டுக்கொண்டு வரச்சொன்னார். பின் அடுத்த நாள் தன்னைப் பார்க்க வரவும் சொன்னார். அதன்படி அடுத்தநாள் அந்தப் பெண் அவரை பார்க்க சென்றபோது, அவர் அவளிடம், போய் நான் கொடுத்த அரிசியை வழியிலிருந்து பொறுக்கி கொண்டு வா என்று கூறினார். அப்போது அவள், 'ஐயா நான் எப்படி அதைப் போய் கொண்டுவருவது? இந்நேரம் அநேகர் மிதித்து, அது இருந்த இடம் கூட தெரியாதே, பறவைகள் கொத்திக்கொண்டு போயிருக்குமே' என்று கூறினாள். அப்போது அவர் அவளிடம், 'ஆம், அப்படித்தான் நாம் சொல்கிற ஒவ்வொரு வார்த்தைகளும் ஒரு முறை சொல்லிவிட்டால் அதைப் பின் பொறுக்க முடியாது. மற்றவர்களைக் குறித்து அவதூறாகப் பேசாதே, புரளியைக் கிளப்பி விடாதே, நாளை உனக்கும் அதே நிலைதான் வரும், திரும்ப இந்த மாதிரி காரியத்தில் ஈடுபட்டால், உனக்கு தண்டனைக் கொடுக்கப்படும்' என்று எச்சரித்து அனுப்பினார்.

பிரியமானவர்களே! நம்மில் அநேகர் பிறரைக் குறித்து தேவையில்லாமல் மற்றவர்களிடம் கதை பேசுகிறோம். அது அவர்களுக்குத் தெரிந்தால் எத்தனை வருத்தப்படுவார்கள் என்று நாம் அதைக் குறித்து நினைப்பதில்லை. எப்படியாவது மற்றவர்களிடம் அவர்களைக் குறித்து குறைவாக பேசினால் நமக்கு ஒரு மனசாந்தி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஒருவேளை நாம் பேசுகிறவர் தவறே செய்யாத பட்சத்தில் அவரைக் குறித்து அநியாயமாக குறை பேசுவது கர்த்தருக்கு அருவருப்பானது என்று வேதம் சொல்கிறது. 'துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானை குற்றவாளியாக்குகிறவனுமாகிற இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்'.

**யோபுவும் நண்பர்களும் நாவும்:-**



யோபு தேவனைக் குறித்து எத்தனையோ காரியங்களை குறையாக சொன்னார். ஆனால் அவருடைய நண்பர்களோ கர்த்தரைப் புகழ்ந்து, அவருடைய குணாதிசயங்களைக் குறித்து நன்மையானவற்றையே பேசினார்கள். ஆனாலும் தேவனுக்கு யோபுவின் நண்பர்கள் மேல் கோபம் வந்தது.

கர்த்தர் இந்த வார்த்தைகளை யோபுவேடே பேசினபின், கர்த்தர் தேமானியனான எலிப்பாசை நோக்கி; உன் மேலும், உன் இரண்டு சிநேகிதர்மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது. என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய் பேசவில்லை (யோபு 42:7) என்று கூறினார். ஏன் அவர் அப்படிச் சொன்னார்? ஏனெனில் யோபு நன்மை செய்திருக்க அவருடைய நண்பர்கள் அவர் செய்த பாவத்தினால்தான் அவருக்கு அந்த வியாதி வந்தது என்று அவரைக் குறித்து குறைவாக பேசினதினால்தான். தேவன் தம் பிள்ளைகளுக்காக எத்தனை வைராக்கியம் பாராட்டுகிறார் பாருங்கள்! ஆதலால் நீங்கள் ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக்கடாக்களையும் தெரிந்துகொண்டு, என் தாசனாகிய யோபினிடத்தில் போய், உங்களுக்காக சர்வாங்க தகனபலிகளை இடுங்கள்; என் தாசனாகிய யோபும் உங்களுக்காக வேண்டுதல் செய்வான். நான் அவன் முகத்தைப் பார்த்து, உங்களை உங்கள் புத்தியீனத்துக்குத் தக்கதாக நடத்தாதிருப்பேன்; என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை என்றார் (யோபு 42:8). அவர் நீதிமான் என்று அழைத்தவர்களை குற்றவாளியாக தீர்ப்பது புத்தியீன செயல் என்று தேவன் சொல்கிறார். அவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் என்று வேதம் சொல்கிறது.

யோபு தேவனைக் குறித்துப் பேசினாலும், கர்த்தர் அவனிடம் சர்வ வல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்? தேவன்பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார். அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக; இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன். நான் இரண்டொருதரம் பேசினேன்; இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன் என்றான் (யோபு 40:2-5) என்று தேவனிடம் தன் குறையைச் சொல்லியபோது அவர் உடனே அவருக்கு அதை மன்னித்து விடுகிறார். அது அவருடைய ஞாபக புத்தகத்திலிருந்து உடனடியாக அழிக்கப்பட்டு போகிறது. நீதிமானாகிய தம் பிள்ளைகள் செய்த தவற்றை அவர்கள் அறிக்கையிட்டவுடன் அதை தேவன் மன்னித்து விடுகிறார். ஆனால் நீதிமானை குற்றவாளியாக பேசினவர்களின் தவறோ கர்த்தருக்கு கோபத்தைக் கொண்டுவருகிறது.

பிரியமானவர்களே! நாம் மற்றவர்களைக் குறித்து தேவையற்ற காரியங்களை பேசவேண்டிய அவசியமில்லை. அவர்கள் தவறு செய்யாத பட்சத்தில் நாம் கூறிய காரியங்கள் தேவனிடத்திலிருந்து கோபத்தைக் கொண்டுவரும். ஆகவே நாம் நம் வார்த்தைகளை குறித்து

மிகவும் எச்சரிக்கையாயிருப்போம். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 12:36) என்று இயேசு கிறிஸ்து கூறினார். ஆகவே நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் சுருக்கமாயும், மற்றவர்களைக் குறை சொல்லாததாயும், தேவையற்ற காரியங்களைக் குறித்துப் பேசாமலும் இருக்கட்டும். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ யோவான்

### அற்பமான ஆரம்பம்



மண்ணில் : 03.09.1793
விண்ணில் : 13.01.1855
ஊர் : நியுஜெர்சி
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : இலங்கை, இந்தியா

ஒரு சுவிசேஷ துண்டுப் பிரதி, ஒரு மாபெரும் எழுப்புதலை உண்டாக்கும் என்று நம்புகிறீர்களா? உலகத்தின் பல பாகங்களிலும், பலர் இரட்சிக்கப்பட்டதற்குக் காரணம் இச்சுவிசேஷ துண்டுப் பிரதிகளே.

ஒரு நாள் ஜான் ஸ்கடர் ஒருவரைப் பார்ப்பதற்காக காத்திருந்தார். அப்பொழுதுதான் அவர் கண்களில் பட்டது அந்த சுவிசேஷ காகிதம், **'உலகத்தின் மனந்திரும்புதல்'** கண்டதும் எடுத்தார், படித்தார், மனதைக் கொடுத்தார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். அதுவே ஒரு மகத்தான எழுப்புதல் இந்திய தேசத்தில் உருவாகக் காரணமானது.

1819-ம் ஆண்டு, இலங்கை சென்ற இவர் முதல் மருத்துவ மிஷனெரியாக தன் பணியை ஆரம்பித்தார். பின்னர் அங்கிருந்து இந்தியாவிற்குப் பயணமானார். சுமார் 36 வருடங்கள் இந்தியாவிலேயே தன் பணிகளைச் செய்தார். இந்தியாவில் மாபெரும் மருத்துவப் புரட்சி இவரால் உருவானது. தனது 7 குமாரர்களையும், 2 குமாரத்திகளையும் மிஷனெரிப் பணிக்கு அர்ப்பணித்தார். இவர் குடும்பத்திலிருந்த 43 நபர்களும், கிறிஸ்தவ பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டவர்களே. இவர்களது வாழ்வால் சுமார் 1100 வருடங்கள் நடைபெறும் பணி சிறப்புடன் நடைபெற்று இன்றும் தொடர்கின்றது.

ஜான் ஸ்கடரின் பேரக்குழந்தையே டாக்டர். ஐடா ஸ்கடர் என்பவராவார். இவர் மூலம் சி.எம்.சி மருத்துமனை வேலூரில் உருவாக்கப்பட்டது. இது சரித்திரத்திலேயே மிகப்பெரிய சான்று ஆகும். ஜான் ஸ்கடரின் அர்ப்பணிப்பும், கிறிஸ்துவின் மேல் உள்ள பற்றும் இந்திய சமுதாயத்திலுள்ள நலிந்தவர்களின் வாழ்வை தழைக்கச் செய்தது. சரீர சுகம் மட்டுமல்லாமல், ஆத்மீக சுகத்தையும் அனுதினம் பெறச் செய்தார். மக்களின் ஆன்மீக வாழ்வு வளர்ந்தது. சமுதாயத்தின் சீர்கேடுகள் மறைந்தது. ஏழை எளியவர்களின் நண்பராக, கிறிஸ்துவின் தொண்டராக தன் பணியை நிறைவு செய்தார் ஜான் ஸ்கடர்.

ஒரு சுவிசேஷத் துண்டுப் பிரதியானது. பல்லாயிரக்கணக்கானோர் இரட்சிப்பின் பாதையில் கடந்து வருவதற்குக் காரணமாக இருந்ததென்றால், நீங்களும் இதைப்போன்ற பணியை செய்யலாமல்லவா?

அன்பரே! வேதாகமப் பிரதிகளை வழங்குவதில் உங்கள் பங்கு என்ன?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** “மற்றவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் காரியங்களை செய்கிறவன் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்பான்”

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! துண்டுப் பிரதிகள் மூலமாகவாவது சுவிசேஷத்தை அறிவிக்க என்னை அர்ப்பணிக்கிறேன்.

**தியானத்திற்கு:-** 2இரா. 7, புலம்பல் 3, 1கொரிந்தியர் 16

## நிகழ்வும் பாடமும்

### பேச்சின் சிறப்பு



- கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பாய்!
- அதிகமாக பேசினால் அமைதியை இழப்பாய்!
- வெட்டியாய்ப் பேசினால் வேலையை இழப்பாய்!
- வேகமாக பேசினால் அர்த்தத்தை இழப்பாய்!
- ஆணவமாய்ப் பேசினால் அன்பை இழப்பாய்!
- பொய்யாய் பேசினால் பெயரையே இழப்பாய்!
- சிந்தித்துப் பேசினால் சிறப்பாய் இருப்பாய்!
- சிரித்துப் பேசினால் அன்போடு இருப்பாய்!

## நாவு வெளிப்படுத்தும் உண்மைகள்

| | | |
|---|---|---|
| 1 | நீதிமானின் நாவு – சுத்த வெள்ளி | நீதிமொழிகள் 10:20 |
| 2 | ஞானியின் நாவு – அறிவு | நீதிமொழிகள் 15:2 |
| 3 | ஆரோக்கிய நாவு – ஜீவ விருட்சம் | நீதிமொழிகள் 15:4 |
| 4 | புரட்டுள்ளவன் நாவு – தீமை | நீதிமொழிகள் 17:20 |
| 5 | புறங்கூறுகிறவன் நாவு – கோபம் | நீதிமொழிகள் 25:23 |
| 6 | கள்ளனின் நாவு – பகை | நீதிமொழிகள் 26:28 |
| 7 | இச்சகனின் நாவு – அழிவு | நீதிமொழிகள் 26:28 |

## நாவின் சொற்கள்

### 1. வெள்ளி பூசிய ஓடு

மனித வாழ்க்கையில் நன்மைக்கும், தீமைக்கும் ஓயாத போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றில் தீமை வெற்றி பெறுவதுபோல் தோன்றினாலும் முடிவில் நன்மையே வெற்றிப்பெறும் என்பதற்கு ஐயமில்லை. நீதிமொழியின் ஆக்கியோன் நீதி. 26:23-ல் மனிதனின் தீய எண்ணங்கள் நிறைந்ததான நாவின் சொற்கள்; கோள் நிறைந்த நாவின் வார்த்தைகள் இவற்றால் ஏற்படும் விபரீதமான விளைவுகளை இப்பகுதியில் சுட்டிக் காட்டுகிறார்.

தன் குடும்பத்தை பிரிந்து தூரதேசத்தில் பணிபுரியும் நபருக்கு அவர் பெயரில் ஒரு மொட்டை கடிதம் வந்தது. அக்கடிதத்தில் அவரது குடும்பத்தினரைப்பற்றி சந்தேகப்படும் அளவில் பல தீயத் தகவல்கள் கூறப்பட்டிருந்தன. அக்கடிதத்தை படித்த மாத்திரத்திலே அந்நேரத்திலிருந்து அவருக்கு தனது வேலை மீது கவனம் செலுத்த முடியாமல் தனது குடும்பத்தின்மீது வெறுப்பும், தேவையற்ற சந்தேகங்களும் எழ ஆரம்பித்தது. நாவிலிருந்து தேவையற்ற வார்த்தைகள் புறப்பட்டது குடும்பத்திற்கு விரோதமாக. இறுதியில் நேரடியாக விசாரித்தபோது யாவும் கற்பனையாக ஜோடிக்கப்பட்டவை என்று தெளிவாகியது.

நம் அனுதின வாழ்வில் தீயவற்றை பிறப்பிக்கும் வார்த்தைகள் நம் வாயிலிருந்து புறப்படுகிறதா என்று சீர்தூக்கிப் பார்த்து எச்சரிப்புடன் வாழக் கடமைப்பட்டுள்ளோம். வஞ்சக உணர்வோடு இனிப்பான, மயக்கமான, பளபளப்பான வார்த்தைகளைச் சொல்லி நம்மை புகழ்வது வெள்ளி பூச்சு பூசிய ஓடுகளுக்குச் சமம். நாவிலிருந்து புறப்படும்

ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் மிகவும் எச்சரிக்கையாய் இருப்பது மிகுந்த நன்மையைத் தரும். நேச அனலில் தணல் உள்ளத்திலும் உதடுகளிலும் வெளியாகட்டும்.

## 2. வெள்ளித்தட்டில் பொற்பழம்




“ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம்” (நீதி. 25:11).

இந்தியாவிற்கு வந்து கல்கத்தா அருகில் உள்ள செராம்பூர் என்ற இடத்தைப் பணிக்களமாக தெரிவு செய்து பணிசெய்த மிஷெனெரி வில்லியம் கேரி தனது கடைசி மூச்சு வேளையில் எனது மரணத்திற்கு பின்பு கேரியைப்பற்றி புகழ்ந்து பேசவேண்டாம். கேரியின் ஆண்டவரைப்பற்றி புகழ்ந்து பேசுங்கள் என்று கூறினாராம். அவர் நாவிலிருந்து புறப்பட்ட அந்த வார்த்தை இன்னும் கருத்துள்ள செய்தியாக அங்கீகரிக்கப்படுகிறது.

திருமறையில் சீரியா நாட்டு படைத்தளபதியான நாகமானின் தொழுநோய் குணமடைய அவன் யோர்தானில் ஏழுதரம் மூழ்கவேண்டும் என்று எலிசா சொன்னபோது, அவன் அதனை மறுக்கின்றார். ஆனால் 1இராஜாக்கள் 5:13-ல் அவனது வேலைக்காரர் ஏற்ற வேளையில் சொன்ன வார்த்தையினால் நாகமான் யோர்தானில் மூழ்கினான். அவர் சரீரம் சிறு குழந்தையின் சரீரத்தைப்போல மாறியதாகப் பார்க்கின்றோம். ஒவ்வொரு வார்த்தையும் அது சொல்லப்பட்ட சூழ்நிலை மற்றும் அதன் பின்னணியம் மிகவும் முக்கியமானவையாகும். இயேசு நாதர் தாம் சிலுவையில் மரிக்கும் முன்பு தனது திருவாய் மலர்ந்து சொன்ன சொற்கள் யாவும் பொன்மொழிகளாக இன்றும் போற்றப்படுகின்றன.

படைப்பின் வரலாற்றில் கடவுளின் வார்த்தை எவ்வளவு முக்கியமானதாக இருந்ததோ அதுபோன்று மனிதவாழ்வில் அனுதினமும் அவன் நாவிலிருந்து புறப்படும் வார்த்தைகள் மிக முக்கியமானவையாகும். நமது நாவின் சொற்கள் தரமும், பொருளும், ஆற்றலும் நிறைந்ததாய் அமைய அறிவுறுத்தப்படுகின்றோம். மேலும் வார்த்தைகள் சரியாக புரிந்துகொள்ளும்படி தொடர்புபடுத்த வேண்டும். இல்லாவிட்டால் தவறான அணுகுமுறை வந்து சேரும் என்பதில் ஐயமில்லை. நம் நாவிலிருந்து எப்போதும் நல்ல சொற்கள் புறப்படுமேயானால் அது நமக்கு பசும்பொன்னிலும் போற்றுத்தற்குரிய வாழ்வு தரும்.

## 3. கற்பனையை பிணைக்கும் நாவு

யோபுவின் துன்ப சூழலில் அவருடைய நண்பர்கள் உரையாடுகின்றனர். யோபுவின் நண்பர் எலிப்பாஸ் இரண்டாவது முறையாக அவரிடம் விவாதிக்கிறார். அங்கு எலிப்பாசின் தொனி முதல் உரையாடலை விடவும் கடுமையாக இருக்கிறது. யோபுவை இறை அச்சமுடையவராக கூறி எலிப்பாஸ் (யோபு 4:3-6) இங்கு அவருடைய சில தவறுகள் இதை கோபத்திற்கு காரணமாயின என்று உரைக்கின்றார்.

எலிப்பாஸின் மனதில் இருந்த யோபுவின் கூற்றுகள் திருமறையில் சொல்லப்படுகின்றன. மேலும் 7,8 வசனங்களை மனுஷரில் முந்தி பிறந்தவர் நீர்தானே? பர்வதங்களுக்கு முன்னே உருவாக்கப்பட்டீரோ? நீர் இறைவனுடைய இரகசிய ஆலோசனையைக் கேட்டு ஞானத்தை உம்மிடமாய் சேர்த்துக்கொண்டீரோ? இத்தகைய கேள்விகள் யோபுவை பார்த்து நீர் மட்டும்தான் ஆன்றோரா? என்று கேட்பதுபோல் இருக்கின்றது. ஒட்டுமொத்தமாக யோபுவின் வாய் அல்லது வீண்பேச்சே அவரைக் குற்றப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பது எலிப்பாஸின் குற்றச்சாட்டு.

இன்று பலருடைய வாழ்வில் அவருடைய வாயிலிருந்து வரும் வார்த்தை அவர்களை குற்றவாளிகளாக தீர்ப்பிடுகிறது. "நுணலும் தன் வாயால் கெடும்" என்பது முதுமொழி. சங்கீதக்காரன் 50-ம் சங்கீதம் 19-ம் வசனத்தில் உன் வாயை பொல்லப்புக்குத் திறக்கிறாய்; உன் நாவு கற்பனையைப் பிணைக்கிறது என கூறுகின்றார். லூக்கா 19:16-22-ல் எஜமானிடமிருந்து ராத்தல் வாங்கிய ஊழியன் அதை பயன்படுத்தாது வைத்துவிட்டு எஜமானனை நோக்கி நீர் கண்டிப்புள்ளவர் என்று உமக்கு அஞ்சி இப்படி செய்தேன் என்று கூறியபோது, எஜமான் பொல்லாத பணியாளனே உன் வாய்ச் சொல்லை கொண்டே தீர்ப்பிடுகிறேன் (லூக். 19:22) என்று கூறினார்.

நம் நாவின் வார்த்தைகள் நம்மை குற்றவாளிகளாக தீர்த்துவிடாதபடி கருத்துடன் பேசுவோம். கனிவுடன் பேசுவோம். கடவுள் தரும் ஆசியைப் பெறுவோம்.

**- V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## செப்டம்பர் 2020 மாத கேள்விகள்

## (வெளிப்படுத்தின விசேஷம் 11-22 வரை)

1. ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை எந்த நதியின்மேல் ஊற்றினான்?
2. வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினவர்கள் யார்?
3. தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு எங்கே நின்றார்கள்?
4. தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது எது?
5. மேகத்தின் மேல் உட்கார்ந்தவர் அரிவாளை எங்கே நீட்டினார்?
6. நகரத்திற்கு விளக்கு யார்?
7. எந்த பழவர்க்கங்கள் உன்னைவிட்டு நீங்கிப்போயின?
8. ஸ்திரீயானவள் போஷிக்கப்பட எத்தனை நாட்கள் தேவனால் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது?
9. சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் எங்கு திறக்கப்பட்டது?
10. ஜீவதண்ணீர் எங்கிருந்து புறப்பட்டு வருகிறது?
11. சமுத்திரத்திலிருந்து எழும்பின மிருகம் எதை போலிருந்தது?
12. அர்மகெதோன் என்பது எந்த பாஷை?
13. ஆலையிலிருந்து எவ்வளவு தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டு வந்தது?
14. எல்லா ஜாதிகளும் எதனால் மோசம்போனார்கள்?
15. ஸ்திரீயானவள் தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி என்ன கொடுக்கப்பட்டது?
16. பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறவன் யார்?
17. மிருகத்தின் இலக்கத்தை யார் கணக்குப் பார்க்கக்கடவன்?
18. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரம் தரித்திருந்தவனின் நாமம் என்ன?
19. கர்த்தாதி கர்த்தரும். ராஜாதி ராஜாவுமாயிருக்கிறவர் யார்?
20. நகரத்து மதில்களின் ஏழாம் அஸ்திபாரம் எதனால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது?

## ஆகஸ்ட் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கறுப்புக் குதிரையின்மேல் - வெளி 6:5
2. நட்சத்திரத்திற்கு – வெளி 8:11
3. 7000 – வெளி 11:13
4. 7 – வெளி 1:4
5. வெள்ளை அங்கிகளை தரித்திருக்கிற ஜனங்கள் - வெளி 7:9-13
6. யேசபேல் - வெளி 2:20
7. கர்த்தர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது – வெளி 8:1
8. இருபுறமும் கருக்குள்ள பட்டயம் - வெளி 1:16
9. 24 மூப்பர்கள் - வெளி 4:10, 5:14
10. ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்பொகிறபோது – வெளி 10:6
11. பாதாளத்தின் தூதன் - வெளி 9:3-11
12. சர்தை சபை தூதர் - வெளி 3:1
13. வானம் - வெளி 6:14
14. மூன்றரை நாளைக்குப்பின்பு – வெளி 11:11
15. மரகதம்போல – வெளி 4:3
16. பெருஞ்சூளையின் புகையிலிருந்து – வெளி 9:2-3
17. 1,44,000 – வெளி 7:4
18. சாத்தானுடைய கூட்டத்தார் - வெளி 3:9
19. மரணம் - வெளி 6:8
20. இயேசு கிறிஸ்து – வெளி 1:5

## ஆகஸ்ட் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Josephin Anto Kingston | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Ancy Daniel | Mrs. Juslin Jaslin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Ashika Joel | Mrs. Leela Gladson | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Aspin Bejo | Mrs. Manju Martin | Mrs. Shiney Johan |
| Mrs. Boopathi Baskar | Mrs. Mary Praveena Gobinath | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Felsi Rani John | Mrs. Nisha Rajan | Mrs. Synthia Srinivas |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Thamari Johnson |
| Mrs. Gracilin Melba Sujin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Vency Deepa Kannan |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Sapthekha Jerry Sathya | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Jeya Rani Victor | | |

## செப்டம்பர் 2020 மாத கேள்விகள்

## (நீதிமொழிகள் 1 முதல் 10 வரை)

1. தகப்பனை சந்தோஷப்படுத்துகிறவன் யார்?
2. யாருடைய பாதை சூரியப்பிரகாசம் போலிருக்கும்?
3. எது உன்னைக் காப்பாற்றும்?
4. தீவினை செய்வது யாருடய விளையாட்டு?
5. முத்துக்களைப் பார்க்கிலும் நல்லது எது?
6. மூடரின் எது அவர்களை அழிக்கும்?
7. உதடுகள் எதைக் காத்துக்கொள்ள வேண்டும்?
8. யார் கனத்தை சுதந்தரிப்பார்கள்?
9. எது ஆயுதமணிந்தவனைப்போல் வரும்?
10. மதிகேடனுடைய முதுகுக்கு ஏற்றது எது?
11. எதைக் கண்மணியைப்போல் காத்துக்கொண்டால் பிழைப்பாய்?
12. எங்கிருந்து ஜீவஊற்று புறப்படும்?
13. உன் சிரசுக்கு அலங்காரமாய் இருப்பது எது?
14. யார் பூமியிலே தங்கியிருப்பார்கள்?
15. எது கர்த்தருக்குப் பயப்படும் பயம்?
16. யாருடைய கை செல்வத்தை உண்டாக்கும்?
17. யார்மேல் பொறாமை கொள்ளக்கூடாது?
18. ஜீவ வழி எது?
19. எதை விட்டு விலகவேண்டும்?
20. யாருடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது?

## ஆகஸ்ட் மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. ஆகாயமண்டலங்களை – யோபு 37:18
2. 140 – (யோபு 42:16)
3. மனுஷன் - (யோபு 34:15)
4. வனாந்தரம் - (யோபு 38:26)
5. எலிகூ - (யோபு 32:2,6)
6. மின்னலின் ஒளியை – (யோபு 36:32)
7. காண்டாமிருகம் - (யோபு 39:10)
8. சூறாவளி – (யோபு 37:9)
9. புதுரசம் - (யோபு 32:19)
10. சமுத்திரத்திற்கு – (யோபு 38:8-9)
11. சர்வ வல்லவருடைய சுவாசம் - (யோபு 33:4)
12. புகை – (யோபு 41:20)
13. காற்று – (யோபு 37:21)
14. அநீதி – (யோபு 34:10)
15. உவர் நிலம் - (யோபு 39:5-6)
16. வீண்வார்த்தைக்கு – (யோபு 35:13)
17. கேரேனாப்புக் - (யோபு 42:14)
18. மகா நீதிபரரை – (யோபு 34:17)
19. பூமி – (யோபு 38:14)
20. மாயமுள்ள இருதயத்தார் - (யோபு 36:13-14)

## ஆகஸ்ட் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Anu | Mr. Kanagavel |
| Mr. Austin Daniel Raj | Mr. Lenin Raj |
| Mr. Bejo Nelson | Mr. Prince J. P. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Rajan V. N. |
| Mr. Jino John | Mr. Ramesh R. |
| Mr. Johan Pratheep | Mr. Robin Devadhas |
| Mr. Justus Martin | Mr. Sujith Gladson |

May God Bless All

## Birthday Celebrants – September 2020

| | |
|---|---|
| 01st September | Miss. Cheryl Hannah, D/o Mr. Immanuel Prince |
| 01st September | Mr. Benny Moses |
| 02nd September | Mr. J. Vinolin Vetha Kumar |
| 02nd September | Mrs. Abisha, W/o Mr. Melbin |
| 03rd September | Mrs. Jeevlin Esther, W/o Mr. Benny Moses |
| 03rd September | Miss. Joylin Angel, D/o Mr. Jenil Singh |
| 06th September | Mrs. Gnana Jenisha, W/o Mr. Justin Johnson |
| 07th September | Miss. Joanna, D/o Mr. Berin Raja |
| 07th September | Mr. Robinson |
| 08th September | Master. Julian Aldric, S/o Mr. Joel |
| 08th September | Mrs. G. Linta Salvin, D/o Mr. George |
| 09th September | Mrs. Annlin Kirubha, W/o Mr. Herbert Goldston |
| 09th September | Mr. Rex Macedo |
| 11th September | Miss. R. Marshya, D/o Mr. Ramji |
| 11th September | Mr. Selvakumar |
| 13th September | Mrs. Enolia, W/o Mr. Michael |
| 14th September | Miss. Britny Pearlzlint, D/o Mr. Jenkin Raj |
| 15th September | Miss. Merzlin Awana, D/o Mr. Melbin |
| 16th September | Master. Levin R. Macedo, S/o Mr. Rex Macedo |
| 19th September | Master. Manasseh Gabriel, S/o Mr. Srinivas |
| 19th September | Mrs. P. N. Sobia, W/o Mr. Jaspher Stalin |
| 20th September | Mrs. Nisha, W/o Mr. V. N. Rajan |
| 21st September | Mr. Arumainayagam Rajasingh |
| 21st September | Mr. Y. John Yesu Lordson |
| 23rd September | Mr. T. Santhosh |
| 24th September | Mrs. Sterbie, W/o Mr. Ramji |
| 25th September | Master. Jason Samuel, S/o Mr. Vimal Kumar |

| | |
|---|---|
| 27th September | Mrs. Priyadarsini, W/o Mr. Kanagavel |
| 27th September | Miss. Johanna Shirly, D/o Mr. Vimal Kumar |
| 27th September | Master. B. Nidhin Broose, S/o Mr. Broosewelt |
| 29th September | Master. Samuel Adriel Sanjay, S/o Mr. Michael |

## Wedding Day Anniversaries – September 2020

| | |
|---|---|
| 02nd September | Mr. Austin Daniel Rai & Mrs. Ancy |
| 04th September | Mr. Venil Singh & Mrs. Sobiya |
| 07th September | Mr. Sujith & Mrs. Sheeba |
| 08th September | Mr. Suresh P. & Mrs. Sajitha |
| 10th September | Mr. Jino John & Mrs. Virgin Jegatha |
| 11th September | Mr. John Jacob & Mrs. Felsy |
| 12th September | Mr. Arun Paul & Mrs. Saja |
| 14th September | Mr. J. P. Prince & Mrs. Vanitha Rani |
| 15th September | Mr. R. Nelson & Mrs. Mabel |
| 20th September | Mr. Augustine & Mrs. Sangeetha |
| 28th September | Mr. Justus Martin & Mrs. Manju |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.
3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபை திறக்கப்படவும், திருச்சபை ஆராதனைகளில் ஆண்டவர் பிரசன்னம் அனைவரும் உணரப்படவும், திருச்சபையில் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.

6. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.

3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.

4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.

5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.
5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. சுதந்திரம் பெற்று 74-ம் ஆண்டை சந்திக்கும் நாட்களில் அரசியலில், சமூகத்தில், சமயத்தில், வாழ்வில், குடும்பங்களில் உண்மையான சுதந்திரம் உருவாக ஜெபிப்போம்.
2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.
3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.
4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.
5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.
2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.
3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.
4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.
5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

# சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## இறைவேண்டல் குறிப்புகள்:-

1. கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......

4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
9. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....
10. குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்!** **இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – செப்டம்பர் 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| செப்டம்பர் 1 | செவ்வாய் | 1கொரி.12:14-26 | 1கொரி.12:22 | எசேக். 34-36 |
| செப்டம்பர் 2 | புதன் | கலா. 6:1-10 | கலா. 6:9 | எசேக். 37-39 |
| செப்டம்பர் 3 | வியாழன் | அப். 4:32-37 | அப். 4:32 | எசேக். 40-42 |
| **செப்டம்பர் 4** | **வெள்ளி** | **1பேதுரு 4:7-11** | **1பேதுரு 4:8** | **எசேக். 43-45** |
| செப்டம்பர் 5 | சனி | கொலோ. 3:12-17 | கொலோ.3:13 | எசேக். 46-48 |
| செப்டம்பர் 6 | ஞாயிறு | யாத். 3:1-17 | யாத். 3:17 | தானி. 1-2 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| செப்டம்பர் 7 | திங்கள் | ஆதி. 18:16-33 | ஆதி. 18:32 | தானி. 3-4 |
| செப்டம்பர் 8 | செவ்வாய் | எஸ்தர் 4:4-17 | எஸ்தர் 4:14 | தானி. 5-6 |
| செப்டம்பர் 9 | புதன் | லூக். 4:16-27 | லூக். 4:18,19 | தானி. 7-9 |
| செப்டம்பர் 10 | வியாழன் | மாற். 1:12-20 | மாற். 1:15 | தானி. 10-12 |
| **செப்டம்பர் 11** | **வெள்ளி** | **ரோமர் 15:22-33** | **ரோமர் 15:32** | **ஓசியா 1-4** |
| செப்டம்பர் 12 | சனி | மத். 8:5-13 | மத். 8:8 | ஓசியா 5-9 |
| செப்டம்பர் 13 | ஞாயிறு | யோவா. 4:19-26 | யோவா. 4:22 | ஓசியா 10-14 |
| செப்டம்பர் 14 | திங்கள் | லூக். 15:11-24 | லூக். 15:21 | யோவேல் 1-3 |
| செப்டம்பர் 15 | செவ்வாய் | பிலிப். 2:5-18 | பிலிப். 2:5 | ஆமோஸ் 1-3 |
| செப்டம்பர் 16 | புதன் | எபேசி. 4:25-32 | எபேசி. 4:28 | ஆமோஸ் 4-6 |
| செப்டம்பர் 17 | வியாழன் | லூக். 18:9-14 | லூக். 18:14 | ஆமோஸ் 7-9 |
| **செப்டம்பர் 18** | **வெள்ளி** | **யோவா. 5:1-15** | **யோவா. 5:8** | **ஒபதியா** |
| செப்டம்பர் 19 | சனி | மத். 18:1-14 | மத். 18:11 | யோனா 1-4 |
| செப்டம்பர் 20 | ஞாயிறு | சங்கீதம் 29 | சங். 29:11 | மீகா 1-4 |
| செப்டம்பர் 21 | திங்கள் | 1பேது. 3:8-17 | 1பேது. 3:11 | மீகா 5-7 |
| செப்டம்பர் 22 | செவ்வாய் | எபிரெ. 12:12-17 | எபிரெ. 12:14 | நாகூம் 1-3 |
| செப்டம்பர் 23 | புதன் | சங்கீதம் 122 | சங். 122:6 | ஆபகூக் 1-3 |
| செப்டம்பர் 24 | வியாழன் | லூக். 10:1-12 | லூக். 10:5 | செப். 1-3 |
| **செப்டம்பர் 25** | **வெள்ளி** | **ரோமர் 12:9-21** | **ரோமர் 12:18** | **ஆகாய் 1-2** |
| செப்டம்பர் 26 | சனி | 1தெச. 3:13-38 | 1தெச. 3:16 | சகரியா 1-6 |
| செப்டம்பர் 27 | ஞாயிறு | யோசு. 24:14-24 | யோசு. 24:18 | சகரியா 7-10 |
| செப்டம்பர் 28 | திங்கள் | சங். 133:1-3 | சங். 133:3 | சகரியா 11-14 |
| செப்டம்பர் 29 | செவ்வாய் | 2இராஜா. 7:3-10 | 2இராஜா. 7:9 | மல்கியா 1-4 |
| செப்டம்பர் 20 | புதன் | யோவா. 17:13-26 | யோவா. 17:24 | மத்தேயு 1-4 |
| அக்டோபர் 1 | வியாழன் | ஆதி. 48:15-20 | ஆதி. 48:19 | மத்தேயு 5-7 |
| அக்டோபர் 2 | **வெள்ளி** | லூக். 2:25-33 | லூக். 2:25 | மத்தேயு 8-9 |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**